"MALAI MALAR"

PAGE NO: 02

DATE: 25.03.2021

புதுவை ஜெர்மன் பல்கலைக்கழக

# ஆன்லைன் கருத்தரங்கு

புதுச்சேரி, மார்ச். 25–

புதுவை பல்கலைக் கழகத்துக்கும், ஜெர்மனியில் உள்ள கொப்லென்ஸ் அப்ளைடு சயின்சஸ் பல்கலைக்கழகழத்துக்கும் கடந்த ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜெர்மனியில் படிக்கும் வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கு நடந்தது. இதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் மதிப்புமிக்க ஈராஸ்மஸ் உதவித்தொகை மூலம் புதுவை பல்கலைக்கழகத்தில் படிக்கும் எம்.பி.ஏ. மாணவர்கள், ஜெர்மனியின் நிதியுதவியுடன் படிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

புதுவை பல்கலைக்கழக இயக்குனர் பாலகிருஷ்ணன், மேலாண்மை பள்ளியின் டீன் சந்திரசேகரராவ், சர்வதேச உறவுகள் துறை டீன் உமா மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர். ஆன்லைனில் நடந்த கருத்தரங்கில் 160–க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். முன்னதாக துறை தலைவர் சாருமதி வரவேற்றார். பேராசிரியர் விக்டர் ஆனந்தகுமார் நன்றி கூறினார்.